# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,711 — 1966 සැප්තැම්බර් 2 වැනි සිකුරාදා — 1966.9.2

14,711 ம் இலக்கம் — 1966 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 2 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 239 | வரவு செலவுக் கூற்றுக்கள் | — |
| பதவிகள்—வெற்றிடம் | — | வரவு செலவுத் திட்டங்கள் | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் | 240 | ஆதன விற்பனைகள் | — |
| துணை விதிகள் | — | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | 243 | நானாவித அறிவித்தல்கள் | — |


### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

#### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

17 (5) ம் பிரிவின் படியான

அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்து (அத்தியாயம் 257) 17 (5) ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு, கிழக்குப் பிரதேச மேற்பாக, பதில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கனக நாயகம் நல்லைநாதன் ஆகிய நான் இதன் அட்டவணையின் முதலாம் பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள கிராமச்சபையின் அக்கிராசனர் தெரிவிற்கான கூட்டத்தை அட்டவணையின் இரண்டாம் பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள திகதியில், மூன்றும் பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில், நான் காம் பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகின்றேன்.

க. நல்லைநாதன்,
பதில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
(கிழக்குப் பிரதேச மேற்பாகம்).

திருக்கோணமலை,
1966 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 20 ந் உ.

அட்டவணை

| | பத்தி 1 கிராமச்சபை | பத்தி 2 திகதி | பத்தி 3 நேரம் மு.ப. | பத்தி 4 இடம் |
|---|---|---|---|---|
| 1. | தோப்பூர் | 8.9.66 | 9.00 | தோப்பூர்க் கிராமச் சபை அலுவலகம் |

9-270—2.9.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,711

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசத்தாருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

பேர்னட் த சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆண்டு ஜூலை மீ 15 ந் உ

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### உள்ளூர் ஆட்சிச் சுருக்குத் தட்டெழுத்தாளர்களின் சேவை (கீழ்த்தரம்)க்கான ஆட்சேர்ப்புக்கான பரீட்சை—(ஆங்கிலம்) 1966

உள்ளூர் ஆட்சிச் சுருக்குத் தட்டெழுத்தாளர்களின் (கீழ்த்தரம்) இடமாற்றத்தக்க சேவையில் சேரவிரும்பும் ஆண்/பெண் பரீட்சார்த்திகளுக்கான ஒரு போட்டிப்பரீட்சை (ஆங்கிலம்) அண்மையில் கொழும்பில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் இடமும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

2. **வேதனம்.**—ஆங்கிலச் சுருக்குத்தட்டெழுத்தாளர்களின் (கீழ்தரம்) பதவிகளுக்கு வெற்றிடங்கள் வரும்போது, (கிராமச்சபைகள் தவிர்ந்த) உள்ளூராட்சி மன்றங்களில், வருடாந்தம் ரூபா 1,740/– ஆரம்பமாகவும், வருடாந்தம் ரூபா 120/– வேதனப்பெருக்கமாகவும், வருடாந்தம் ரூபா 3,780/– வரை உயரும் வேதனமாகவும் கொண்ட வேதன அடிப்படையில், சேவைசெய்யச் சித்தியடைந்த பரீட்சார்த்திகள் நியமிக்கப் படுவார்கள். இந்த வேதன அடிப்படையில், வருடாந்தம் ரூபா 2,940/– பெறுமுன் வினைத்திறமைகாண் தடைசெயற்படும். அரசாங்க வரிகள், நிபந்தனைகளுக்கிணங்க, வீட்டுவாடகைப்படியும், அரசாங்க வரிகள் வீதம், தற்காலிக வாழ்க்கைப்படியும் கொடுக்கப்படும்.

3. **சேவை நிபந்தனைகள்.**—(அ) பரீட்சையில் சித்தியடைந்த ஆண் பரீட்சார்த்திகள் நியமனத்திகதியிலிருந்து 3 வருடங்களுக்குத் தகுதிகாண் காலநிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்களது பதவிகள் இளைப்பாற்றுச்சம்பளம் பெறுவதற்குரியவை. பரீட்சையில் சித்தியடைந்த பெண் பரீட்சார்த்திகள் முதலில் சகாயநிதியடிப்படையில் நியமிக்கப்பட்டு, நியமனத்திகதியிலிருந்து 3 வருடங்களுக்குப் பரீட்சைகாண் கால நிலையிலிருப்பார்கள். 10 வருடங்கள் முடிவடைவதற்கு முன் எக்காலத்திலேனும், இளைப்பாற்றுச்சம்பள ஸ்தாபனத்துக்குள் வரும் விருப் புரிமையைப் பெற அவர்கள் தகுதியுடையவர்கள். இவ்விருப்புரிமையை ஒரு முறை பயன்படுத்தும் பெண் பரீட்சார்த்திகள், அதன் பின் தகுதிகாண் காலநிலையில் அமர்த்தப்படுவார்கள். அதன் பின் அவர்களுடைய தகுதிகாண் காலநிலை, அவர்கள் சேவை செய்திராத 3 வருடப் பரீட்சைகாண் காலநிலைக்குச் சமமானதாகும். தகுதிகாண் காலநிலை முடிவடைந்த பின் பரீட்சார்த்திகளைப் பதவியில் உறுதிப்படுத்துவதும், இளைப்பாற்றுச்சம்பள ஸ்தாபனத்துக்குள் வரும் விருப் புரிமையைப் பயன்படுத்தாத பெண் பரீட்சார்த்திகள் தமது பரீட்சைக் கான காலநிலை முடிவடைந்தவுடன் தொடர்ந்து ஊழியஞ் செய்விக்கப் படுவதும், திருப்திகரமான வேலையிலும் நடத்தையிலும், செயமுறைப் பரீட்சை விதந்துரைக்கப்பட்ட வினைத்திறமைப் பரீட்சையில் சித்தியடைவதிலுமேயே தங்கியிருக்கின்றன. வருடாந்தம் ரூபா 2,940/– பெறுமுன் வரும் வினைத்திறமைகாண் தடையினின்றும் பதவி உயர்த்தப்படுவது திருப்திகரமான வேலையிலும், நடத்தையிலும் பரீட்சையில் சித்தியடைவதிலுமேயே தங்கியிருக்கின்றது.

(ஆ) உள்ளூராட்சிச் சேவையில் நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் பெறத்தக்கதுமான பதவிகளை வகிக்கும் சித்தியடைந்த பரீட் சார்த்திகள், உ.ஆ.சே. பிரமாணம் 22 (2) ன் பிரகாரம் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். பதிற்கடமை காலப்பகுதி முடிவடைந்ததும் பதவியில் அவர்கள் உறுதிப்படுத்தப்படுவது கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். பதிற்கடமை காலப்பகுதி முதலில் 6 மாதங் களுக்குச் செயற்படும்.

(இ) உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் (264 வது அதிகாரம்) அதன் கீழியற்றப்பட்ட எந்தப் பிரமாணங்கள் ஆகியவற்றிற் குட்படுத்தி, உள்ளூராட்சி மன்றத்தின் பிரமாணங்களினாலும், துணைச்சட் டங்களினாலும் சேவை நிபந்தனைகளும், விடுதலை அனுமதியும் ஆளப் படும்.

(ஈ) (மாநகரசபை தவிர்ந்த) உள்ளூராட்சி மன்றம் ஒன்றிற்கு நியமிக்கப்படும் சித்தியடைந்த பரீட்சார்த்திகள், மேற்படி கட்டளைச்சட்டத் துக்கு விதந்துரைக்கப்பட்ட இரண்டாவது அட்டவணையிலுள்ள பிரதேசத் துக்குள் இடமாற்றப்பட்டவராவதுடன் இலங்கையிலுள்ள பிரதேசத்துக்குள் எந்த நிலையத்துக்கும் அனுப்பப்படுபவராவர்.

(உ) அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க உத்தியோக கருமமொழி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளை, அமுல் நடாத்துவது சம்பந்தமாக இதுவரை இயற்றப்பட்ட அல்லது இனிமேல் இயற்றப்படக்கூடிய விதிகள் எதனிற்கும் தேர்ந் தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் இணங்கவேண்டும். உ.ஆ.சே. கட்டளைச் சட்டத்தின ஏற்பாடுகள் (264 வது அதிகாரம்) அதன் கீழியற்றப் பட்ட எந்தப்பிரமாணங்கள் அல்லது திருத்தங்களுக்கு உட்பட்டவராவர்.

4. இலங்கை அரசாங்க வர்த்தமானியின் 4 வது பகுதியில் சித்தி யடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். வெற்றிடங்கள் வந்தாலும், வரும்பொழுதும் அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

5. தகுதி.—(1) பரீட்சார்த்திகள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(2) பரீட்சார்த்திகள் இலங்கையராயிருத்தல் வேண்டும்.

(3) பரீட்சார்த்திகள் குறைந்தது பின் வருவனவற்றிலாகுதல் ஏற்கனவே சித்தியடைந்திருக்க வேண்டும் :—

(அ) இலண்டன் மட்ரிக்குலேஷன் சான்றிதழ் அல்லது கேம்பிரிஜ் சிரேட்டச் சான்றிதழ் அல்லது இலங்கை சிரேட்ட பாடசாலை (ஆங்கிலம்)ச் சான்றிதழ் அல்லது சிரேட்ட குடிமனையியற் சான்றிதழ், அல்லது

(ஆ) சிரேட்ட பாடசாலைச் சான்றிதழும் (சிங்களம் அல்லது தமிழ்) பின்வருவனவற்றுள் ஒன்றும் :—

(1) சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் (சிங்களம் அல்லது தமிழ்) பரீட்சையில் அல்லது பொதுக்கல்விச் சான்றிதழ் (சாதாரணம்) (ஆங்கிலமொழி மூலம்) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி.

(2) பொதுக்கல்விச்சான்றிதழ் (சாதாரணம்) (ஆங்கிலமொழி மூலம்) பரீட்சையில் ஆங்கிலமொழியில் சித்தி.

(இ) (1) சிங்களம்/தமிழ்.

(2) எண்கணிதம்/தூயகணிதம்/வர்த்தககணிதம்.

(3) ஆங்கிலமொழி (திறமைச்சித்தி) ஆகிய பாடங்களுடன் இரு தடவைகளுக்குமேல் தோற்றியிராத, ஆறுபாடங்களில் சித்தியடைந்த பொதுக்கல்விச் சான்றிதழ் ; அல்லது

(ஈ) இறுதி வர்த்தகச் சான்றிதழ் ; அல்லது

(உ) பின்வருவனவற்றுள் ஒன்று :—

(1) கேம்பிரிஜ் கனிஷ்ட சான்றிதழ்
(2) கல்வித்திணைக்களத்தின் கனிஷ்ட பாடசாலைச் சான்றிதழ் (ஆங்கிலம்)
(3) கல்வித்திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையின் கனிஷ்ட பாடசாலைச் சான்றிதழ் (ஆங்கிலம்)

} இதில் ஒன்றுடன் பின் வருவனவற்றில் ஒன்றும் :

(அ) இலண்டன் வர்த்தக சேம்பரின் உயர்தர வர்த்தகச் சான்றிதழ் (எந்த ஒரு பிரிவும்) ;

(ஆ) இலண்டன் வர்த்தகச் சேம்பரின் வர்த்தகச் சான்றிதழ் (எந்த ஒரு பிரிவும்) ;

(இ) இலங்கை வர்த்தகச் சேம்பரின் வர்த்தகச் சான்றிதழ் (எந்த ஒரு பிரிவும்).

**குறிப்பு.**—இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களின் முடிவு திகதிக்கு முன, மேற்சொன்ன பரீட்சைகள் எதினதும் பெறுபேறுகள் வினியோகிக்கப்பட்டிராத, அப்பரீட்சைகளுக்குத் தோற்றியுள்ள பரீட்சார்த்தி களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(4) 22.9.1966 ல் பரீட்சார்த்திகள் 25 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு அதிகமாகாமலும் இருத்தல் வேண்டும்.

தேவைப்படின் :—

(அ) தமது வயதிலிருந்து, சென்ற யுத்தத்தின்போது தாம் ஆற்றிய திரட்டுச் சேவையை, படைகளிலிருந்த பரீட்சார்த்திகள் கழிக்கலாம் ; அத்துடன்

(ஆ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்குத் தொடர்ந்து அரசாங்க சேவையில் இருந்த அல்லது இருக்கும் தற்காலிகச் சுருக்குத் தட்டெழுத்தாளர்கள் அல்லது தட்டெழுத்தாளர்கள், தமது வயதிலிருந்து இத்தகைய தற்காலிக சேவையைக் கழிக்கலாம் ; ஆனால் 1.4.1946 க்குப் பின் இத்தகைய தற்காலிக ஊழியத்தில் அவர்கள் இருந்திருத்தல் வேண்டும்.

(5) 2.9.1966 க்கு நேர்முந்தி குறைந்தது 3 வருடங்களுக்காகுதல், உள்ளூர் ஆட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்துக்கான இரண்டாவது அட்டவணையில் விதிக்கப்பட்ட பிரதேசத்தில் வசித்திருக்க வேண்டும்.

(6) உள்ளூராட்சிச் சேவையில் ஏற்கனவே ஊழியஞ் செய்விக்கப் படுபவர்களுக்கான விசேட சலுகைகள்—

(1) 2.9.1966 அன்று அல்லது அதற்கு முன் தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்ட உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள தட்டெழுத்தாளர் கள், வயது, கல்வித் தகைமைகள் எவ்வாறிருப்பினும், பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

(2) 2.9.1966 அன்று அல்லது அதற்கு முன் தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்ட உள்ளூர் ஆட்சி எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பிலுள்ள எழுதுவினைஞர்கள், இவ்விளம்பரத்தின் 5 (3) (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) பந்தியில் விதந்துரைக்கப்பட்ட கல்வித்தகைமைகள் எவ்வாறிருப்பினும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

(3) 2.9.1966 ல் உள்ளூர் ஆட்சிச் சேவையில் நிரந்தர பதவிகளை வகிப்பவர்களும் உள்ளூராட்சி மன்றம் ஒன்றில் நிரந்தர ஊழியஞ் செய்பவர்களும், 2.9.1966 ல் 2 வருடங்களுக்குக் குறையாத திருப்தி கரமான சேவைசெய்த உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள தற்காலிக இலிகிதர்களுமே இவ்விளம்பரத்தின் 5 (3), (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) பந்தியில விதந்துரைக்கப்பட்ட கல்வித்தகைமைகள் எவவாறிருப்பினும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கபபடுவர்.

(7) கொழும்பு மா. ந. சபையின் பிரயாணிகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் சேவையிலிருந்தவர்களும் ட்ரொலி பஸ் சாரதிகளும், நடத்திகளும், பதவி அழிக்கப்பட்டதனால் சேவையினின்று இளைப்பாற்றுவிக்கப்பட்டவர்களுமானவர்கள், 5 (3) பந்தியில் (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) வில் குறிப்பிடப்படும் தகைமைகள் இருக்கும் பட்சத்திலும் 2.9.1966 ல் 50 வயதுக்கு மேற்படாது இருக்கும் பட்சத்திலும், இப்பரீட்சைக்குத் தோற்ற அருகதையுடையவராவர்.

(8) **விண்ணப்பங்கள்.**—(1) 7.9.1966 முதல் கொழும்பு, கோட்டை, கபூர் கட்டடம், முதன்மாடி, 29 1/5 அறையிலுள்ள உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளரிடமிருந்து பரீட்சைப் பிரவேச விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பரீட்சைக்கான பிரவேச விண்ணப்பப் படிவத்தைத் தபால் மூலம் கோரும் ஒவ்வொருவரும், தனது விண்ணப்பத்துடன், முகவரியிடப்பட்ட நீண்ட தபாலுறையையும் அனுப்ப வேண்டும். பரீட்சையின் பெயர், பரீட்சையை எம்மொழி மூலம் பரீட்சார்த்தி எடுக்கவிருக்கிறார் என்ற விபரங்கள் தெளிவாக, உறையின் தலைப்பிலுள்ள இடது கைமூலையில் எழுதப்பட்டிருக்கவேண்டும் ; இதனால் விரைவாகப் படிவங்களை உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளர் அனுப்பிவைப்பார்.

(2) 22.9.1966 அன்று அல்லது அதற்கு முன் கொழும்பு, த. பெ. 530, உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவருக்குக் கிடைக்கும்படி விண்ணப்பங்கள் பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்படவேண்டும். இத்திகதிக்குப் பின் கிடைக்கும் எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். உறையின் தலைப்பிலுள்ள இடதுகை மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(3) ரூபா 15 பெறுமதியான முத்திரைகளில் கையொப்பமிட்டதைக் கொண்டதாக விண்ணப்பங்கள் இருத்தல் வேண்டும்.

(4) அரசாங்க சேவை அல்லது உள்ளூராட்சிச் சேவையின் ஏற்கனவே ஊழியஞ் செய்விக்கப்படும் பரீட்சார்த்திகள், தமது விண்ணப்பங்களை, தாம் வேலைசெய்யும் திணைக்களங்களின்/உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பவேண்டும். எந்த ஒரு பரீட்சார்த்தியும் இவ்விதம் செய்யத் தவறின் அவர் தகைமையிழந்தவராவர். 22.9.1966 அன்று அல்லது அதற்குமுன் உள்ளூராட்சிச் சேவை அதிகாரச்சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டித் தமது விண்ணப்பங்களை நேரகாலத்துடன் தமது திணைக்களங்களின்/உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களிடம் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுகிறார்கள்.

(9) **தகுதித் தாஸ்தாவேஜுகள்.**—(1) 2.9.1966 க்கு நேர் முந்திக் குறைந்தது 3 வருடங்களாக, உ. ஆ. சே கட்டளைச்சட்டத் (264 வது அதிகாரம்) துக்கான இரண்டாவது அட்டவணையில விதந்துரைக்கப்பட்ட "பி" பிரதேசத்தில பரீட்சார்த்தி வசித்துவருபவர் என்று காட்டும் இருப்பிடச் சான்றிதழ், பெரும்பகுதி இறைவரி உத்தியோகத்தர், சமாதான நீதவான், வழக்குரைஞா, வழக்கறிஞர் அல்லது பிரசித்த நொத்தாரிஸ், இவர்களுள் யாரிடமாவது பெற்று இருத்தல் வேண்டும். (இச்சான்றிதழின் மாதிரிப்படிவம், விண்ணப்பப்படிவத்தின் 16 வது கூட்டில் தரப்பட்டுள்ளது. மேற்சொன்ன எவரிடமாவது பரீட்சார்த்திகள் இதனைப் பூர்த்தி செய்து பெற்றுக்கொள்ளவேண்டும். வேருகச் சான்றிதழை விண்ணப்பத்துடன் பரீட்சார்த்திகள் அனுப்பவேண்டியதில்லை.)

(2) விண்ணப்பத்துடன் வேறு எந்த தாஸ்தாவேஜுகளும் அனுப்பக் கூடாது. ஆனால் கேட்கப்பட்டவாறு, வேண்டப்பட்ட எல்லா தகவல்களும் படிவத்தில் தரப்படவேண்டும்.

(3) தகைமைபெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து தகுதிக்கான தாஸ்தாவேஜுகள் சாட்சியமாக வேண்டப்படும். இத்தகைய பரீட்சார்த்திகள், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவர் இவற்றைக் கேட்கும் பொழுது உடனேயே பதிவு அஞ்சல் மூலமாக இவற்றை அனுப்பிவைக்க வேண்டும்.

(4) பின்வரும் தாஸ்தாவேஜுகள் அவசியம் தேவை :—

(அ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவுச்சான்றிதழ் (சத்தியவோலைகள், அல்லது கல்விக்காரணங்களுக்காக வினியோகிக்கப்பட்ட விசேட சான்றிதழ்கள் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சான்றுரைக்கப்பட்ட பிரதி போன்றவை ஏற்றுக்கொள்ளப் பட மாட்டா.

(ஆ) உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவரின் திருப்திக்கு ஏற்றவாறு பொறுப்புள்ள ஒருவரால் கையொப்பமிடப்பட்ட நற்பண்புச் சான்றிதழ், அரசாங்க அல்லது உதவிப்பாடசாலையில் பரீட்சார்த்தி பயின்றிருந்தால், அவர் கடைசியில் பயின்ற அரசாங்க அல்லது உதவிப்பாடசாலையின் அதிபரிடமிருந்து நற்பண்புச்சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லாவிட்டால், பரீட்சார்த்திகள் உபாத்திமார் (பள்ளிக்கூட ஆசிரியர் விரும்பத்தக்கது) அல்லது சமாதான நீதவான், வழக்குரைஞர், வழக்கறிஞர் பிரசித்த நொத்தாரிஸ் அல்லது பொதுவாகக் கூறினால் பிரபலமானவரும், உடனடியாகத் தொடர்பு கொள்ளக் கூடியவருமான ஒருவர் இவர்களுள் ஒருவரிடமிருந்து நற்பண்புச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) கல்வித் தகைமைகளுக்குச் சாட்சியமாயுள்ள சான்றிதழ்களின் மூலப்பிரதிகள்.

(ஈ) அடையாள அட்டை.

5. விண்ணப்பங்களை அனுப்புந் தருணத்தில் வேண்டப்பட்ட தாஸ்தாவேஜுகளையும் தயாராய் வைத்திருக்கும்படி பரீட்சார்த்திகள் வேண்டப்படுகிறார்கள். வேண்டப்பட்ட தாஸ்தாவேஜுகளைக் காட்ட முடியாத அல்லது காட்டத் தாமதிக்கும் எந்தப் பரீட்சார்த்தியும், உ. ஆ. சே. அ. சபைத் தலைவரினால் கேட்கப்படும் பொழுது, பரீட்சார்த்தியின் பிரவேசம் நிராரிக்கப்படும்.

**பி. கு.—(1) விதந்துரைக்கப்பட்ட படிவத்தில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

(2) இவ்வறிவித்தலினால் வேண்டப்பட்ட தகைமைகளுக்கு எல்லாவிதத்திலும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. **பரீட்சைப் பிரவேசம்.**—ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பிய பரீட்சார்த்திகளுக்கு உ. ஆ. சே. அ. ச. தலைவர், பிரவேசப் படிவங்களை வினியோகிப்பார், பரீட்சையை மேற்பார்வை செய்ய நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம், பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது பிரவேசப்படிவங்களைக் கொடுக்கவேண்டும். இத்தகைய படிவத்தைக் கொடுக்கத் தவறும் பரீட்சார்த்தி தகைமையிழப்பவராவார்.

(2) தமக்குக் கொடுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அமரவேண்டும். தனக்குக் கொடுக்கப்பட்ட மண்டபத்தைத் தவிர்ந்த வேறு மண்டபத்தில் தோற்றும் பரீட்சார்த்திக்குப் பரீட்சைப் பிரவேசம் மறுக்கப்படும்.

(3) பிரவேச அட்டையுடன், நேரசூசியும் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், பரீட்சைத் தினத்தன்று, மேற்பார்வை செய்யும் பரீட்சிப்பவரிடம் தனது பிரவேசப்படிவத்தைக் கையளிக்க வேண்டும்.

(4) பரீட்சை தினத்துக்குக் குறைந்தது 7 நாட்களுக்குள் தனது பிரவேசப் படிவம் கிடைத்திராத பரீட்சார்த்தி, தனக்குப் பிரவேசப் படிவம் கிடைக்கவில்லை என்றும், பின்வரும் தகவல்களைத் தந்தும், உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவருடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

(1) பரீட்சையின் பெயர் : ————.

(2) முழுப்பெயர் : ————.

(3) முழுத்தபால் முகவரி : ————.

**பி. கு.**—பரீட்சைக்குப் பிரவேசம் அளிக்கப்பட்டால், தகைமை ஏற்றுக் கொள்ளப்பட்டதென்ருகாது.

11. இப்பரீட்சைக்கான பிரமாணங்களின் பிரகாரம் தகுதியற்றவர் என்று ஒரு பரீட்சார்த்தி காணப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது அதன் போது அல்லது அதன் பின் எந்த இடத்திலேயும் அவரது பரீட்சார்த்தம் இரத்துச் செய்யப்படத்தக்கது.

12. தம் அறிவின் எல்லைக்குள் பரீட்சார்த்திகளால் தரப்பட்ட எந்தத் தகவல்களும் பொய்யானவை என்று காணப்படும் பட்சத்திலும்கூட அவர்கள் நியமனம் பெற்றிருந்தால், பதவி நீக்கம் செய்யப்படத் தக்கவராவார். வேண்டுமென்றே எந்த உண்மையையும் மறைத்தால், இவ்விதமே தண்டிக்கப்படத் தக்கவராவர்.

13. **அமராது விலகுலும் பணம் மீளத்தருதலும்.**—எக்காரணத்தைக் கொண்டும் முத்திரைகளின் பெறுமதி மீளத்தரப்படமாட்டாது.

14. உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விடுதலை.—உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டு தமது சபைகளின் கடமைபார்க்கும் உத்தியோகத்தர்களுக்குக் கடமை விடுதலை அளிக்கும்படி உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர்கள் தயவுடன் வேண்டப்படுகிறார்கள்.

**15. அடையாள அட்டைகள்.**—தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும், மேற்பார்வையாளரின் திருப்திக்கிணங்க, பரீட்சை மண்டபத்தில் தாம் இன்னாரென்ற அடையாளத்தைப் பரீட்சார்த்திகள் நிரூபிக்க வேண்டும். இதற்கெனப் பின்வரும் தாஸ்தாவேஜுகளில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.—

(அ) அஞ்சற்பகுதி மா அதிகாரியினால் வினியோகிக்கப்பட்ட அடையாள அட்டை ;

(ஆ) இப்பரீட்சை தினத்துக்கு முந்திய 3 வருடங்களுக்கும் வினியோகிக்கப்பட்ட சட்டப்பெறுமதியான கடவுச்சீட்டு.

(இ) அரசாங்கத் திணைக்களத்தில் அதிகாரத்தின் பேரில், இப்பரீட்சை தினத்துக்கு முந்திய 3 வருடங்களுக்கும் வினியோகிக்கப்பட்டதும் உடைமையாளரின் புகைப்படத்தைக் கொண்டதுமான உத்தவுச் சீட்டு சான்றிதழ், அல்லது வேறு எந்த தாஸ்தாவேஜுகளாவது

(ஈ) கடவுச்சீட்டு (பாஸ்போட்) அளவுள்ள புகைப்படம், அதன்பின் பக்கத்தில் கீழ்க்காட்டப்படும் அத்தாட்சி, அவ்வாறு அத்தாட்சிப் படுத்தக்கூடியவர் ஒருவரால் கையொப்பப்படிவத்தில் இருத்தல் வேண்டும்.

" பின்புறத்திலுள்ள புகைப்படம்.......... .................. என்பவருடையதென்பதையும் அன்னாரின் கையொப்பம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதென்பதையும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

——————,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

——————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

பரீட்சை மண்டபத்தில் தனது அடையாளச்சீட்டைச் சமர்ப்பிக்கத் தவறும் எந்தப் பரீட்சார்த்தியும் தகைமையிழந்தவராவார்.

**16. பரீட்சைத் திட்டம்.**—பரீட்சைப் பாடங்களும், ஒவ்வொரு பாடத்துக்குக் கொடுக்கப்பட்ட புள்ளிகளும் கீழே தரப்படுகின்றன. எல்லா எழுத்துத்தாள்களிலும், கூடாத கையெழுத்துக்கும், எழுத்துக் கூட்டல் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். தெளிவற்ற கையெழுத்துடைய பரீட்சார்த்திகள் தகைமையிழப்பதற்குட்பட்டவராவர்.

| | | புள்ளிகள் |
|---|---|---|
| (1) | ஆங்கில வியாசம் (ஒரு மணித்தியாலம்) .. | 50 |
| (2) | ஆங்கிலத்தில் சுருக்கெழுத்து. 5 நிமிடங்களுக்கு, நிமிடத்துக்கு 80 சொற்கள் வீதம், சுருக்கெழுத்தில் எழுத்துப் பகுதியைத் தருதலும், அப்பதிவுகளை நிமிடத்துக்கு 7 சொற்கள் வீதம், தட்டெழுத்தில் பெயர்த்துத்தருதலும்.. | 150 |
| (3) | ஆங்கிலத்தில் தட்டெழுத்து—600 சொற்கள் அடங்கிய எழுத்துப் பகுதியை, தட்டச்சு எந்திரத்தில், 20 நிமிடங்களுக்கு–அதாவது–நிமிடத்துக்கு 30 சொற்கள்–சரியான பிரதியாக தட்டெழுத்தில் அடித்தல் .. ... | 50 |
| (4) | சிங்களம்/தமிழ் (ஒரு மணித்தியாலம்) .. | 50 |

**குறிப்பு.**—(அ) இந்தத்தாள் (சிங்களம்/தமிழ்) தகைமைபெறும் பரீட்சையாக மாத்திரமே கருதப்படும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அதற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளுள், குறைந்தது 40 விகிதமாகுதல் பெறவேண்டும். இவ்விதம் தகைமைபெற்றவர்களிடமிருந்து, நியமனத்துக்குப் பரீட்சார்த்திகளைத் தேர்ந்தெடுப்பதற்கு, இத்தாளில் பெறும் புள்ளிகள் கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

(ஆ) சிங்களம் அல்லது தமிழ் அல்லது கீழ்த்தரச் சிங்களம் அல்லது கீழ்த்தரத் தமிழ் ஒரு பாடமாக சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பெற்ற பரீட்சார்த்திகள் அல்லது, சிங்களம் அல்லது தமிழில் உள்ள பொதுக்கல்விச் சான்றிதழ் (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், இத்தாளினின்றும் தவிர்க்கப்படுவர்.

**குறிப்பு.**—ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தனது சொந்த தட்டச்சு எந்திரத்தைப் பரீட்சை மண்டபத்துக்குக் கொண்டுவரவேண்டும்.

**17. வைத்தியப்பரீட்சை.**—தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தீவில் எந்தப் பகுதியிலும் சேவை செய்ய உடற்றகுதியுடையவர்கள் என்று, வைத்தியப் பரீட்சையில் சித்தியடைய வேண்டியுள்ளது.

தலைவர்,
உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 26 ந் உ.

**குறிப்பு.**—இப்பரீட்சை சம்பந்தமான எந்தத் தொடர்பும், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவருடன் நேரடியாக வைத்துக் கொள்ளக் கூடாது.

உள்ளூராட்சிச் சேவைகளுக்கு ஆட்சேர்ப்புக்கான காரணங்களுக்காக, " இலங்கையர் " என்ற பதம் பின்வருமாறு விபரிக்கப்படுகிறது.

(அ) பரம்பரை வழியாக அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசை.

(ஆ) பதிவு மூலம் இலங்கைப் பிரசையாக இருப்பதற்கு, விண்ணப்பித்த அல்லது விண்ணப்பிக்கும் நோக்கமுடையவரும், இத்தகைய பிரசாவுரிமைக்குச் சாட்சியத்துடன் தகுதியுடையவர் என்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரினாலும் கருதப்படுபவருமாவர்.

குறிப்பிடப்படும் அட்டவணையில் விதந்துரைக்கப்பட்ட பிரதேசங்கள் வருமாறு :—

" ஏ " பிரதேசம் பின்வருபவற்றை உள்ளடக்கியுள்ளது :—

கொழும்பு, களுத்துறை காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை அரசிறை மாவட்டங்கள். புத்தளம் பற்று கிராமப்பகுதியும், கிறேவேட்ஸும், கல்பிட்டி பகுதி, தமிழர் ஹத்பத்து, உடப்புகிராமப்பகுதி ஆகியவை தவிர்ந்த புத்தளம் அரசிறை மாவட்டம்.

" பி " பிரதேசம் பின்வருபவற்றை உள்ளடக்கியுள்ளது :—

வடமத்திய மாகாணமும், ஊவா மாகாணமும், கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், புத்தளம், அரசிறை மாவட்டத்திலுள்ள தமிழர் ஹத்பற்று, புத்தளம் பற்று, வவுனியா தெற்கு (சிங்கள பிரிவு) வவுனியா அரசிறை மாவட்டம். திருகோணமலை அரசிறை மாவட்டத்திலுள்ள கோமறன்கடவலை மதவாச்சி, கந்தளாய் கிராமப்பகுதி, மட்டக்களப்பு அரசிறை மாவட்டத்திலுள்ள பிந்தனைப்பற்று, அம்பாறை அரசிறை மாவட்டத்திலுள்ள பானமகிராமப்பகுதி, வேவாகம்பற்று காரியாதிகாரியின் பிரிவின் கீழுள்ள மெடபலாத்து, உடபாலத்து கிராரமப்பகுதிகள், அம்பாறை அரசிறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறைப்பற்று காரியாதிகாரியின் பிரிவின் கீழுள்ள சம்மாந்துறைப்பற்று காரியாதிகாரியின் பிரிவின் கீழுள்ள சம்மாந்துறை மேற்கு கிரமப்பகுதி.

" ஸி " பிரதேசம் பின்வருபவ்றறை உள்ளடக்கியுள்ளது :—

வடமத்திய மாகாணமும், ஊவா மாகாணமும், கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், புத்தளம் அரசிறை மாவட்டத்திலுள்ள தமிழர் ஹற்றுப்பற்று, புத்தளம்பற்று, வவுனியா தெற்கு (சிங்களப்பிரிவு) வவுனியா அரசிறை மாவட்டம். திருகோணமலை அரசிறை மாவட்டத்திலுள்ள கோமறக்கடவலை, மதவாச்சி, கந்தளாய் கிராமப் பகுதி, மட்டக்களப்பு அரசிறை மாவட்டத்திலுள்ள பிந்தனைப்பற்று, அம்பாறை அரசிறை மாவட்டத்திலுள்ள பானம கிராமப்பகுதி, வேவாகம்பற்று காரியாதிகாரியின் பிரிவின் கீழுள்ள மெடபலாத்து, உடபலாத்து கிராமப் பகுதிகள், அம்பாறை அரசிறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறைபற்று காரியாதிகாரியின் பிரிவின் கீழுள்ள சம்மாந்துறை மேற்கு கிராமப்பகுதி.

9-249—2.9.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,711

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## உள்ளூரதிகாரத் தாபனங்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள் அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிக்கப்பட்டுள்ள உள்ளூரதிகாரத் தாபனங்களது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென, (262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகாரத் தாபனங்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 36 ம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல்கள் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1966 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 21 ந் டி.

அட்டவணை

| வட்டார இலக்கம் | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| **வவுனியா மாவட்டம்** | |
| **கிழக்குமூலை வடக்கு கிராமச் சபை** | |
| 10 | கே. சரவணமுத்து |
| **குருணாக்கல் மாவட்டம்** | |
| **ரம்படகல்ல கிராமச் சபை** | |
| 8 | பமுனுரத்ன முதியன்செலாகே களுபண்டா |
| **அனுராதபுர மாவட்டம்** | |
| **மாதம்புவ கோறளே கிராமச் சபை** | |
| 5 | ரங்கிராகே பெத்தா |

9-247—2.9.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,711

---

## உள்ளூரதிகாரத் தாபனங்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள், அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிக்கப்பட்டுள்ள உள்ளூரதிகாரத் தாபனங்களது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென, (262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகாரத் தாபனங்கள் கட்டளைச் சட்டத்தின் 66 (2) ம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல்கள் அதிகாரி
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1966 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 21 ந் டி.

அட்டவணை

| வட்டார இலக்கம் | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| **குருணாக்கல் மாவட்டம்** | |
| **பொதுஹெர கிராமச் சபை** | |
| 2 | ஜயசுந்தர முதியான்செலாகே விஜேசேன |
| **கல்கமுவ கிராமச் சபை** | |
| 2 | விஜேசூரிய முதியான்செலாகே ஹீன் மெனிகெ |
| **இரத்தினபுரி மாவட்டம்** | |
| **பெல்மதுல்ல கிராமச் சபை** | |
| 4 | ஆரச்சிகே ஹீன்மகாத்மயா. |

9-246—2.9.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,711

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. **பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.**

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக கைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. **நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிரீம் கோட் புறொக்ரால்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.**

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| | ரூ. | ச. |
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 15 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 15 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... | 165 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... | 330 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.7.66 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 36 | 00 | 49 | 00 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 26 | 00 | 31 | 50 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் ... ... ... | 33 | 50 | 41 | 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|
| | சதம் | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 40 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 80 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 20 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 40 | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படாது, இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர் தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1966**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** .. | 2. 9.66 | வெள்ளி .. | 26. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9. 9.66 | வெள்ளி .. | 2. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16. 9.66 | வெள்ளி .. | 9. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23. 9.66 | வெள்ளி .. | 16. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30. 9.66 | வெள்ளி .. | 23. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஒக்ரோபர்** .. | 7.10.66 | வெள்ளி .. | 30. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 14.10.66 | வெள்ளி .. | 7.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 20.10.66 | வியாழன் .. | 14.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 27.10.66 | வியாழன் .. | 20.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| **நவெம்பர்** .. | 3.11.66 | வியாழன் .. | 27.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 10.11.66 | வியாழன் .. | 3.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 18.11.66 | வெள்ளி .. | 10.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 25.11.66 | வெள்ளி .. | 18.11.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| **திசெம்பர்** .. | 2.12.66 | வெள்ளி .. | 24.11.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 9.12.66 | வெள்ளி .. | 2.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.12.66 | வெள்ளி .. | 8.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 23.12.66 | வெள்ளி .. | 16.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.12.66 | வெள்ளி .. | 22.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1966 ம் ஆண்டு ஜூலை மீ 15 ம் உ.

**பேர்னுட் த சில்வா,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.